Registered as a News Paper at Sri Lanka    பக்கங்கள் 04    விலை ரூபா 4.00

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம் 02    பெப்ரவரி    (28 02 1991)    வியாழக்கிழமை    ஒலி 10

## தேயிலைத்தோட்ட ஊழியர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று ஒருநாள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் நிலவும் மோசமான நிலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பல இலட்சம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதாகவும், வேலை (சி தம்பரம்பார்க்க)

# திருமலையில் அதிரடி

# 5 இராணுவம் பலி

## ஆயுதங்கள் பல மீட்பு; புலிகள் தரப்பில் சேதமில்லை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பல ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை 8.00 மணியளவில் பாலம்போட்டாறு, ஜெயபுர, கோவிலடி, பாலம்போட்டாறு பாடசாலை ஆகிய இடங்களில் முகாமிட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் முகாமில் இருந்து வெளியேறி தேடுதல் நடாத்தியசமயம், பாடசாலை முகாமுக்கும் கோவிலடி முகாமுக்கும் இடையில் விடுதலைப்புலிகள் இராணுவத்தினரை வழிமடக்கித் தாக்குதல் தொடுத்தனர். இந்தத் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இராணுவத்தினரிடம் இருந்து

- ★ ரி 56 ரக துப்பாக்கிகள் -4
- ★ இகற்குரிய மகசீன் -14
- ★ ரி-81 ரக துப்பாக்கி -1
- ★ இதற்குரிய மகசீன் -3
- ★ ஐ. எம். ரவைகள் -375
- ★ ஐ. ஆர். கைக்குண்டு-1

ஆகிய ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக்கொண்டனர். புலிகள் தரப்பில் எதுவித இழப்புக்களும் ஏற்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

## காரைநகரில் ஷெல் தாக்குதல்; வயலில் நின்ற பெண் காயம்

(காரைநகர்)

காரைநகர்சிறிலங்கா கடற்படைமுகாமிலிருந்து குடியிருப்புக்கள் மற்றும் நெல் வயல் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முற்பகல் 11.30மணியளவில் நடாத்தப்பட்ட இத் தாக்குதலில் நெல்வயலில் அருவடை வேலையில் ஈடுபட்டிருந்த வி. புவனேஸ்வரி (வயது 33) என்ற பெண் படுகாயமடைந்துள்ளார். வயலில்நின்றவரை யோர் ...

## காவலரண் அமைக்க முயன்ற படைகளை புலிகள் துரத்தினர்

(ஆனையிறவு)

ஆனையிறவு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து வெளியேறி காவல் அரண்களை அமைக்க முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நடாத்தியதில் படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

நேற்று முன்தினம் காலை 9.00 மணியளவில் இடம்பெற்ற இத் தாக்குதலில் படையினருக்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

## லோக்சபா ஒப்புதல்

(டில்லி)

தமிழ் நாட்டில் சென்ற மாதம் 30 ஆம் திகதி கொண்டு வரப்பட்ட ஜனாதிபதி ஆட்சிக்கு லோக்சபா ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற வாக்கெடுப்பில் 163 வாக்குகள் சாதகமாகவும், எதிராக 42 வாக்குகளும் கிடைத்தன. 5 பேர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

## ஐ. நா. தீர்மானங்களை ஏற்பதாக ஈராக் எழுத்துமூலம் அறிவிப்பு

(வாஷிங்டன்)

ஈராக் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 12 தீர்மானங்களையும் ஏற்றுக்கொள்வதாகவும், யுத்தக் கைதிகளை விடுவிப்பதாகும், யுத்தச் செலவுகளை ஏற்பதாகவும் தெரிவித்துள்ளது. இந்தத் தகவல்கள் அடங்கிய கடிதத்தை ஈராக் (4 ஆம் பக்கம் பார்க்க)

ஒப்புதல் கிடைக்கும் வரை ...

## எதிர்க்கட்சிகள் எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும்

-கருணாநிதி

(சென்னை)

தமிழக அரசு கலைக்கப்பட்டது தொடர்பாக ... எதிர்க்கட்சிகள் எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டுமென்று தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் நேற்று செய் (4ஆம் பக்கம் பார்க்க)

## இலஞ்சம் வாங்கிய கிராமசேவகர் 50,000ரூபா அபராதம் செலுத்தினார்

(யாழ்ப்பாணம்)

நற்சான்றுப் பத்திரங்களை வழங்க ரூபா 100 முதல் 150 ரூபா வரை பெற்றுவந்த கிராமசேவகர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். இது பற்றி மேலும் தெரியவருவதாவது:

அரியாலையைச் சேர்ந்த கிராமசேவகர் ஒருவர் வெளிநாடு செல்வதற்கான கடவுச்சீட்டு பெறவும் வேலைவாய்ப்புக்கான நேர்முகப் பரீட்சைக்கும் தேவைப்படும் நற்சான்றுப் பத்திரங்களை வழங்குவதற்கு பணம் அறவிட்டுள்ளார்.

இது தொடர்பாக கிடைத்த தகவல் அடிப்படையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் ஊழல் தடுப்புப் பிரிவினர் கையும் மெய்யுமாகப் பிடித்துக்கொண்டனர். இவர் தனது அலுவலகத்தில் அமர்ந்து கையூட்டுப் பெற்ற குற்றத்திற்காக ரூபா 50,000 தண்டம் செலுத்தப் பணிக்கப்பட்டுள்ளார். இத்தப் பணம் வடக்குக் கிழக்கு அகதிகள் புனர்வாழ்வு கழகத்திடம் பாதிக்கப்பட்ட மக்களின் சேவைக்காக ஒப்படைக்கப்படவுள்ளது.

## 13ரூபாவிலை அதிகரிப்பிற்கு 3,000ரூபா அபராதம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த க. பொன்னம்பலம் என்னும் வியாபாரி லக்ரோஜின் என்னும் பால்மாவை ஒருபை நிர்ணய விலையிலும் பார்க்க பதின்மூன்று ரூபா கூடுதலாக விற்கும்போது விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி ஊழல் தடுப்புப் பிரிவினரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். இவர் தான் செய்த குற்றத்தை ஏற்றுக்கொண்டு வடக்கு கிழக்கு அகதிகள் புனர்வாழ்வு கழகத்திற்கு ரூபா 3000 குற்றப் பணமாகவழங்கியுள்ளார்.

## கலப்படத்திற்கு 5000ரூபா தண்டம்

(செ. க. மை.)

## பாகிஸ்தான் 20 கோடிரூபா சிறிலங்காவிற்கு உதவி

(கொழும்பு)

பாகிஸ்தான் முதன்முறை ... களாகவும் இலங்கைக்கு ...

**சரிவிளம்பரம்**

## தோத்திரத்திரட்டு

சைவத் திருநெறித் தோத்திரத்திரட்டு (அகத்தியர் தேவாரத்திரட்டு, உமாபதி சிவாசாரியார் அருள்முறைத் திரட்டு உட்படப் பன்னிரு திருமுறைகளும் திருப்புகழ் பாடல்களும் அடங்கியது) தொகுப்பு: க. சி. குலரத்தினம், விலை ரூபா 25/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(B-2028)

# குடிமனைகள் நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்கு

முல்லைத்தீவு முகாமிலிருந்து குடிமனைப்பகுதிகளை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டு வருகின்றன.

முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல்கள் தண்ணீரூற்று முள்ளியவளைப் பகுதிகளில் வந்து விழுவதாக அங்கிருந்து வருவோர் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக தொடர்ந்து ஏவப்படும் இந்த ஷெல் தாக்குதல்களால் அப்பகுதி மக்கள் பதற்றமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (88)

## 'பேடன்பவல்' நிகழ்ச்சிகள்

"பேடன் பவல்" அவர்களுடைய ஞாபகார்த்த நிகழ்ச்சிகள் கடந்த வாரம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சென். யோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர் போஜன் தலைமையில் நடைபெற்றன.

# டிசம்பரின் பின் முல்லைக்கு கப்பல் மூலம் உணவில்லை

(மாங்குளம்)

முல்லைத்தீவுக்கு டிசம்பர் மாதத்திற்குப் பின் கடல்மார்க்கமாக உணவுப் பொருள்கள் இதுவரை அனுப்பி வைக்கப்படவில்லை.

இதேவேளை இராணுவத்தினர் வவுனியாவில் முல்லைத்தீவுக்கான உணவுப் பொதிகளைத் தடுத்து வைப்பதனால் முல்லை மாவட்ட அகதிகளுடன் திருமலை அகதிகளும் அரசின் நிவாரணப் பொருளை நம்பியுள்ள பொதுமக்களும் பல நாட்களாகப் பட்டினியால் வாடுகின்றனர். (82)

## தமிழ் ஆசிரியர்கள் பாரபட்சம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் ஆசிரியர்கள் மாகாணக்கல்வி அமைச்சினால் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள்.

மட்டக்களப்பில் பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இரண்டு வருட சம்பள முற்பணத்துக்கு விண்ணப்பித்தும் அது இடைக்கவில்லையாம். இதே போல் ஆறு மாதச் சம்பள முற்பண விடயத்திலும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகிறார்கள்.

## தொடர்பு அம்பலமாகியுள்ளது

(கொழும்பு)

புலிகளுக்கும் சுதந்திரக் கட்சிக்கும் உள்ள இரகசியத் தொடர்பு தற்போது அம்பலத்துக்கு வந்து விட்டது. வவுனியாவுக்குச் சென்று அனுர பண்டாரநாயக்கா நடத்திய பேச்சுவார்த்தை இப்போது பகிரங்கமாகிவிட்டது என முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் கடந்த வெள்ளியன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அன்னையர் முன்னணி பேரணிக்கு முழு ஆதரவு வழங்குவதாக லண்டன் அலுவலகத்திலிருந்து புலிகள் அறிவித்திருப்பதாக திருமதி பண்டாரநாயக்கா பகிரங்கமாகக் கூறினார். வவுனியாப் பேச்சுவார்த்தையின் விளைவு தான் இது என்று இராஜாங்க அமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு 1991-04-29ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. மருத்துவத்தில் உதவி விரிவுரையாளர்.
2. உதவி நூலகர் தரம் I
 உதவி நூலகர் தரம் II
3. வர்த்தகமும் முகாமைப் படிப்புகளிலும் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II

சம்பள அளவுத்திட்டம்:

உதவி நூலகர் தரம் I
சிரேஷ்ட விரிவுரையாளர்)
ரூபா 8000-5x250-9250/-

உதவி விரிவுரையாளர்)
உதவி நூலகர் தரம் II
ரூபா 3900/- மாதமொன்றுக்கு (நிலையானது ஒரு வருடத்திற்கு)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் விபரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தாபனங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ணப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற 23x10 ச.மீ அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்;

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் ...

## இது என் தேசம் இது என் தாயகம்!

கணந்தோறும் பிணங்கள் குவியும்!
பிணங்கள் வீதிக் குழிகளை நிரப்பும்!
மாடிகள் மண்ணிடை வீழ்ந்து சிதறும்
நிமிர்ந்த குடிசைகள் வீழ்ந்து சாவும்
நீக்குளியபடி நீர்த்திரை குவியும்
சிங்கள நாட்டினர் சிற்றமே கொண்டு
எங்கள் இருப்பை அழித்திடல் ஒன்றே
எனது தாயகம் என்பதைச் சொல்லும்....
இது என் தேசம் இது என் தாயகம்!

அடக்குமுறைகளின் பிடியைத் தகர்க்க
கொதித்தெழுமிளைஞர் கொள்கையை வீழ்த்த
குண்டுகள் மாரி பொழிந்திடும் பூமி
புதைகுழிதோறும் புதைத்த விதைகள்
மறுபடி மறுபடி அரும்பென முகிழ்க்கும்
எதிரியின் மனதினைத் தகர்த்திடும் போர்க்கள்
விழ விழ எழுந்து மறுபடி நிமிரும்...
இது என் தேசம் இது என் தாயகம்!

பூகோளத்தில் எங்கும் எம்மவர்
எனினும் எமக்கோர் தேசமேன் இல்லை?
அடிக்கப் பொறியுள் வீழ்ந்தனரோ
அடிமை விலங்கொடுவாழ்ந்திருந்தோமோ?
மொழிவழி ஆட்சியும் நமக்கென்றானால்
என்மொழி ஆட்சியுறு தேசமுமெங்கே?
அகதிகளாக அலைந்திடும் கூட்டம்
அனைத்துமே இங்கு தமிழரின் கூட்டம்
அகதிகள் நாமெனப் பூமியில் எங்கும்?
இருந்ததற்கொரு வரலாறில்லை....
எமதிடம் இதுவென வகுக்குமோ மீட்டு
தாயகம் என்பது உண்மையென்றானால்
இது என் தேசம் இது என் தாயகம்!

-வளவை வளவன்

(ஈழநாதம் ஓராண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற கவிதை)

## தேவையற்ற காகிதங்கள் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகள் மற்றும் அரச அலுவலகங்களில் கிடைக்கும் தேவையற்ற காகிதங்களை குறிப்பிட்ட விலை வீதம் முறைசாராக் கல்விப்பிரிவு கொள்வனவு செய்ய உள்ளது.

இந்தக்கழிவு கடதாசிகளை சேர்த்து வைக்கும் பாடசாலைகள் தம்முடன் தொடர்பு கொள்ளும்படியும் தம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள காகித ஆலைக்கு இது பயன்படுத்தப்படும் எனவும் இக்கல்விப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ். சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (லோ)

## இந்தியாவிலும் நிறையப் பிரச்சினைகள் உண்டு

(கொழும்பு)

அன்னையர் முன்னணி நடத்திய பேரணிக்குப் பிறகு விடுதலைப்புலிகளுக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் பாரிய உறவொன்று ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண தெரிவித்துள்ளார்.

குண்டு வீச்சுத் தாக்குதலினால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து இந்தியாவின் நிலைப்பாடு பற்றி செய்தியாளர் கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளித்த ரஞ்சன், இந்தியா இதைப்பற்றி அதிகம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளாது. அவர்கள் கையில் நிறையப் பிரச்சினைகள் உண்டு. மற்றவர்கள் பிரச்சினையை பற்றி அவர்கள் ஏன் கவலைப்படப் போகிறார்கள் என்றார்.

## சைக்கிள் திருட்டு

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூ...


**BECON**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

G.A.Q; B.A. வகுப்புகள்

பொருளியல்

S. வரதராஜன் B. A (HONS.)

G.A.Q வினாவிடை வகுப்பு
சனி 3-00 p m

B.A. முழுப்பாடத்திட்ட வகுப்பு
சனி 2-00 p m

ஆரம்பம்:- 2-3-91 (B-2074)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 22-12-1965

## நினைவு கூருகின்றோம்

பெப்ரவரி 28

1987 ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

லெப். ...

கொள்ளப்படும்.

1. நெறித்த மருத்துவத்திற்கு உதவி விரிவுரையாளர்.
2. உதவி நூலகர் தரம் I
உதவி நூலகர் தரம் II
3. வர்த்தகமும் முகாமைப் படிப்புகளிலும் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II

சம்பள அளவுத்திட்டம்:
உதவி நூலகர் தரம் I
சிரேஷ்ட விரிவுரையாளர்)
ரூபா 8000-5x250-9250/-

உதவி விரிவுரையாளர்)
உதவி நூலகர் தரம் II
ரூபா 3900/- மாதமொன்றுக்கு (நிலையானது ஒரு வருடத்திற்கு)

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப்படிவங்களும் விபரங்களும் இப்பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தாபனங்கள் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்;

மேற்குறித்த பதவிகளுக்குரிய விண்ண படபடிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற 23x10 ச.மீ அளவுடைய தபாலுறை அனுப்பப்படல் வேண்டும்;

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவார்;

குறிப்பு: உதவி நூலகர் தரம் I தரம் II ஆகியவற்றைப் பொறுத்தவரை கணிதம், புள்ளிவிபரவியல், பௌதிகவியல் அல்லது இரசாயனவியலில் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு உயர் பிரிவைக் கொண்டுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்;

- பதிவாளர்;

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்;
1991-02-25 (B-2078)

அடக்குமுறைகளின் பிடியைத் தகர்க்க
கொதித்தெழுமிளைஞர் கொள்கையை விழ்த்த
குண்டுமழை மாரி பொழிந்திடும் பூமி
புதைகுழி தோறும் புதைத்தவிதைகள்
மறுபடி மறுபடி அரும்பென முகிழ்க்கும்
எதிரியின் மனதினைத் தகர்த்திடும் போர்முகில்
விழ விழ எழுந்து மறுபடி நிமிரும்...
இது என் தேசம் இது என தாயகம்!

பூகோளத்தில் எங்கும் எம்மவர்
எனினும் எமக்கோர் தேசமேன் இல்லை?
அதிக்கப் பொறியுள் வீழ்ந்ததனாலோ
அடிமை விலங்கொடுவாழ்ந்திருந்ததேமோ?
மொழிவழி ஆட்சியும் நாடுமுண்டானால்
என்மொழி ஆட்சியும் தேசமு மெங்கே?
அகதிகளாக அலைந்திடுங் கூட்டம்
அனைத்துமே இன்று தமிழரின் கூட்டம்
அகதிகள் நாமென்னப் பூமியில் எங்ஙன?
இருந்ததற்கோரொரு வரலாறில்லை....
எமதிடம் இதுவென வருக்குமோவிடம்
தாயகம் என்பது உண்மையென்றானால்
இது என் தேசம் இது என் தாயகம்!

-வளவை வளவன்

(ஈழநாதம் ஓராண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப் பட்ட கவிதைப் போட்டியில் மூன்றாவது பரிசுபெற்ற கவிதை)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 22-12-1965

மண்மீட்பில் 28-02-1987

## வீரவேங்கை நெல்சன்
## (கணபதிப்பிள்ளை பாலகுமார்)

தமிழ்த் தமிழும் தமிழீழ மண்ணும்
புதுப் பொலிவுடன் தரணியில் பிறந்திட
தாயகம் மீட்கவென்று வீரத்துடன் புறப்பட்டீர்!
அரக்கர் அட்டகாசம் கட்டுவனில் கண்ட போது
மிக்கோக "நெல்சா" துப்பாக்கி தூக்கி நின்றாய்!
அடுக்காத பாவிகள் உன் உயிரைப்பறித்தாலும்
துடிப்பாக நிற்கும் உன் புகழுடலைப்பறிக்கலாமா?
"நெல்சா" உன் நினைவுநாலாண்டாய்ப்போனாலும்
"பாலா" உன் நினைவு பல ஆண்டாய்-போகுதடா!

தமிழீழம் காண்பதே எமது
கடைசி மூச்சாக இருக்கவே வேண்டுமென
திடமான முடிவுடனே செயலாற்றி
இன்னுயிர் நீத்த மாவீரரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

'நெல்சன் வீதி,'
சிறுவிளான்,
இளவாலை;

உற்றார், உறவினர்கள்
நண்பர்கள்.

(R-1134)

...ளும்படியும் தபமால் ஆரம்பிக்கப்பட்டுள்ள காதித ஆலைக்கு இது பயன்படுத்தப் படுமெனவும் இலங்கைப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (லோ)

## இந்தியாவிலும் நிறையப் பிரச்சினைகள் உண்டு

(கொழும்பு)

அண்மையில் முன்னணி நடத்திய பேரணிக்குப் பிறகு விடுதலைப்புலிகளுக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் பாரிய உறவொன்று ஏற்பட்டுள்ளதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண தெரிவித்துள்ளார்.

குண்டு வீச்சுத் தாக்குதலினால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவது குறித்து இந்தியாவின் நிலைப்பாடு பற்றி செய்தியாளர் கேட்ட கேள்வியொன்றிற்குப் பதிலளித்த ரஞ்சன், இந்தியா இதைப்பற்றி அதிகம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளாது. அவர்கள் கையில் நிறையப் பிரச்சினைகள் உண்டு. மற்றவர்கள் பிரச்சினையை பற்றி அவர்கள் ஏன் கவலைப்படப் பேசுகிறார்கள் என்றார்.

## சைக்கிள் திருட்டு

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் உள்ளூர் உற்பத்திக் கண்காட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை ஆசிரியரின் சைக்கிளும், ரொக்கப் பணமும் திருடப்பட்டது

நேற்றுமுன்தினம் இந்தத் திருட்டு இடம்பெற்றசமயம் இந்த ஆசிரியர் மூதவி செய்முறைப் பயிற்சியளிப்பதில் ஈடுபட்டிருந்தார்.

## வேலணை மேற்கு தெரிவு

(புங்குடுதீவு)

தீவக கூட்டுறவு ஒன்றியம் மரணவிக் கட்டைகள் பயிரிடுவதற்கான நிலமாக வேலணை மேற்குப் பகுதியை தெரிவுசெய்துள்ளது கடந்த பதின்மூன்றாம் திகதி நடைபெற்ற ஒன்றியத்தின் நிர்வாக சபைக் கூட்டமொன்றில் மேற்படி தெரிவு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் உப உணவு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கையை அந்தந்த சங்கங்கள் மேற்கொண்டு துரிதப்படுத்த வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (22)


## G.A.Q; B.A வகுப்புகள்

பொருளியல்

S. வரதராஜன் B. A (HONS.)

G.A.Q வினாவிடை வகுப்பு
சனி 3-00 p m

B.A முழுப்பாடத்திட்ட வகுப்பு
சனி 2-00 p m

ஆரம்பம்:- 2-3-91 (B-2074)




## நினைவு கூருகின்றோம்

## பெப்ரவரி 28

1987ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளுடனான மோதலில் வீரமரணமடைந்த

**லெப். கௌதமன்**
(வே. கருணைநாயகம் - அம்பிளாந்துறை)

இதே ஆண்டு கட்டுவன் பகுதியில் இடம்பெற்ற மோதலில் வீரமரணமடைந்த

**மோகன்** (சு. பாலமோகன் - மட்டுவில்)
**இல்லட்** (க. நடராசா - காரைநகர்)
**நெல்சன்** (க. பாலகுமார் - இளவாலை)
**சிவசிறி** (புங்குடுதீவு)
**தேவானந்த்** (வே. சேதீஸ்வரன் - மயிலிட்டி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மாண்டவர் மீண்டு வந்திடல்
மண்ணுலக வாழ்வில் இல்லை.
மண்ணின் மீட்பில் மரித்தவர் - எங்கள்
எண்ணத்தில் வாழ்கிறீர் என்பதால்
திண்ணிய தோளை உயர்த்தினோம்!
கொண்ட கொள்கையில் உறுதியோடு
எங்கள் தாயக விடியலைத் தேடி
உங்கள் பாதையில் தொடருது பயணம்!!

- விடுதலைப்புலிகள்
மக்கள் முன்னணி

(B-2070)

### ※ சிந்தனைக்கு ※

மனித இனத்தினர் அனைவரையும்
நான் நேசிக்கின்றேன் - அமெரிக்கரைத் தவிர.
— ஜேம்ஸ் ஜாக்ஸன்


# ஈழநாதம்

51, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 28-02-1991
தொலைபேசி
அலுவலகம்: 023 - 2339 நிர்வாகபீடம்: 2308
[illegible] 02


## சமாதானம் பேண புதிய அமைப்புத் தேவை

குவைத்தை விட்டுத் தனது படைகளை ஈராக்கிற்குள் திரும்புமாறு ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் கட்டளை பிறப்பித்துள்ளார். அதன்படி விலகலும் ஆரம்பித்து விட்டது. இத்தலையங்கம் எழுதும்போது குவைத் நகரைவிட்டு ஈராக் வெளியேறியும் விட்டது.

இதன்மூலம் ஐ. நா. முக்கிய தீர்மானங்களில் ஒன்றான குவைத்தை விட்டு ஈராக் நிபந்தனையின்றி வெளியேற வேண்டும் என்ற விதி நிறைவேறுகின்றது. அதாவது ஈராக் குவைத்திற்குள் இராணுவத்தை அனுப்பியவுடனேயே ஐ. நா. சபை ஈராக்கிற்கு எதிரான பன்னிரெண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது.

இந்நிலையில், குவைத்தைவிட்டு ஈராக் வெளியேறுவதனால் ஈராக் வெளியேற வேண்டும் என்ற முக்கிய தீர்மானம் ஏனைய தீர்மானங்களில் பெரும்பாலானவையும் வலுவிழக்கின்றன.

மேலும், ஈராக் குவைத்தை ஆக்கிரமித்தவுடனேயே உலக நாடுகள் யாவும் ஈராக்கிற்கு எதிரான தீர்மானங்களை ஆதரித்தனவே ஒழிய ஈராக்கை அழிக்கவோ அன்றி சதாம் ஹுசைன் தலைமையிலான ஈராக் இராணுவத்தை சிதைக்கவோ உலகநாடுகள் எவையும் ஐ. நா. தீர்மானங்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை.

ஆனால் ஐ. நா. சபையின் ஈராக்கிற்கு எதிரான தீர்மானங்களைத் தமக்குச் சாதகமாக வைத்துக்கொண்டு அமெரிக்கா ஈராக்கின் ஆள்புல எல்லையிலும் இறைமையிலும் தலையிடுகின்றது. ஈராக்கின் இராணுவத்தையும், பொருளாதாரத்தையும் சமூக நடவடிக்கைகளையும் முடங்கச் செய்து சதாம் ஹுசைனை ஆட்சியில் இருந்து துரத்தப் பார்க்கின்றது.

இதன் வெளிப்பாடே ஈராக் குவைத்தைவிட்டு வெளியேறுவதாக அறிவித்த பின்னரும் அமெரிக்காவின் மிலேச்சத்தனமான தாக்குதலாகும். இத்தாக்குதல் மூலம் அமெரிக்கர்கள் உலகத்திற்குப் போதிப்பது உலகம் அமெரிக்கருக்கு மட்டுமே சொந்தம் என்பதாகும் அத்தோடு மேற்கு ஐரோப்பியருக்கும் சிறு பங்குண்டு என்பதாகும்.

மேற்கு ஆசியாவில் தமது இலக்கை அடைவதற்காக வளைகுடாப் பிரச்சினையை அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது இதன்மூலம் ஐ. நா. சபையையும் அதன் உறுப்பு நாடுகளையும் நன்றாக ஏமாற்றியுள்ளது. ஈராக் மீதுயுத்தம் தொடுப்பதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையின் பெரும்பான்மை உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற்ற அமெரிக்கா, தான் விரும்பிய யாவற்றையும் செய்துமுடித்த பின்னரே போரை நிறுத்திக் கொள்ளும் நிலையை உருவாக்கியுள்ளது.

# ஆசிரியர்களின் படுகொலைகள்

# மாணவர்கல்விக்குசாவுமணியா

அண்மையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள வங்காலையில் இடம்பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஏனையவர்களின் படுகொலைகளைக் கண்டிக்கும் மாணவர்களின் எழுச்சிக்கு ஆதரவு அளிக்கும் யாழ். பல்கலைக் கழக மாணவர் அவை அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

சிறிலங்கா அரசானது காட்டுமிராண்டித் தனமான இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் தமிழ் மக்களிடையே பட்டினிச் சாவை ஏற்படுத்தவும் பொருளாதாரத் தடையை விதித்து அதனை இறுக்கமாக இராணுவத்தின் மூலம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் விமானக் குண்டுவீச்சு மூலம் பாடசாலைக் கட்டடங்களைத் தகர்த்தது. பின்னர் பாடசாலைகளை மாணவர்களுடன் சேர்த்து அழிப்பதற்கு விமானக்குண்டுகளை வீசியது. இன்று இவற்றிற்கு மேலாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோரை படுகொலை செய்வதன் மூலம் தமிழ் மக்களின் கல்வியையும் சீரழிப்பதற்கான நடவடிக்கை இது என்பதனை உணர்த்துகின்றது.

இக்கல்விச் சீரழிவினை மேலும் வலுவூட்டுவதாக க.பொ.த (உ/த), க.பொ.த (சா/த) பரீட்சைகள் பின் போடப்படுவதும் இழுத்தடிக்கப் பல்கலைக்கழகம் [illegible] அமைந்திருக்கின்றது.

இராணுவக் கெடுபிடி, பொருளாதார நெருக்கடி என்பனவற்றின் மத்தியிலும் எமது மாணவர்களின் கல்வி பாதிக்கக் கூடாது எனும் தலையாய சிந்தனையுடன் தமது உயிரையும் துச்சமென மதித்து சேவை புரிந்த அதிபர்கள், ஆசிரியர்களின் படுகொலைகளைக்கண்டு வேதனை அடையும் அதேவேளை இதனை வன்மையாகக் கண்டிப்பதுடன் தமிழ் மகன் எவனும் இக்கொடூர நிகழ்வு பற்றி பாராமுகமாக இருக்க மாட்டான் என்பதனையும் தெரிவித்துக் கொள்வதுடன் சர்வதேச சமூகமும் சிறிலங்கா இனவெறி அரசின் நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்

சிறிலங்கா அரசின் இந்நடவடிக்கைகள் தமிழ் மாணவ சமூகத்துக்குவிடப்பட்ட அறைகூவலாக ஏற்று அதற்கேற்ப எமது கல்வியைத் தொடர்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை எமது பாதுகாப்பையும் நாமே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதனை இது எடுத்து விளக்குகிறது. இதனை உணர்ந்து எமது நடவடிக்கைகள் முன் உணர்வாக இருப்பதே சிறிலங்கா அரசின் முகத்திரையைக் கிழித்தெறிவதாக அமையும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இச்சம்பவத்தின் போது படுகொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்வதுடன் இது தொடர்பான எழுச்சி நடவடிக்கை எடுக்கும் சிறிலங்காவின் இனஅழிப்பு, பொருளாதாரத்தடை, உற்பத்தித் தடை ஆகியவற்றின் பாதிப்புக்களில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு அளிப்போம் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

## தற்கொலை

கொடிகாமம் கச்சாய் வீதியில் குருசிங்கம் மனோகரன் என்பவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமம் கச்சாய் வீதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. (86)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு, செம்மணி, கல்லுண்டாய் உப்பளங்களைச் சேர்ந்த சகலதர ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்குமான கூட்டமொன்று நாளை வெள்ளிக்கிழமை (1-3-91) முற்பகல் 10-00 மணிக்கு பளையிலுள்ள பிராந்தியக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகலதர ஊழியர்களினதும், அதிகாரிகளினதும் கடந்த வருட ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையிலான சம்பளக் கொடுப்பனவு சம்பந்தமாக கடைப்பிடிக்கவேண்டிய புதிய அணுகுமுறை பற்றி ஆராய இருப்பதால் சகலரையும் [illegible]

## தாக்கப்பட்ட படகையும் மூவரையும் காணவில்லை

(செ. தா. மை)

மீன் பிடிப்பதற்கு படகில் சென்ற நால்வர் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது ஒருவர் கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்தார் மற்றைய மூவரும் படகும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

கடந்த 24ஆம் திகதி மாலை 6 மணியளவில் உடுத்துறையிலிருந்து சென்றவர்களுக்கே இக்கதி நேர்ந்தது. தப்பி வந்தவர் ஐயர் என்று அழைக்கப்படும் மகேந்திரன் (வயது 38) என்பவராகும். இது இவ்வாறிருக்க பருத்தித்துறைக் கடல் பகுதியில் இரு சடலங்கள் மிதப்பதாகவும் படகுடன் காணாமற்போன மூவருள் இருவரின் சடலங்கள் இதுவாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

## பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் விரும்பவில்லை

### -நவசமசமாஜக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

"வடபகுதியில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்" என நவ சமசமாஜக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. [illegible]

[illegible] கப்பட்டுள்ள மக்களுக்கு அவர்களது அத்தியாவசியத்தேவைகளான உணவு, மருந்து போன்றவற்றின் சிறுபகுதியையேனும் வழங்கத் தவறிய அரசாங்கம் இவ்விதம் தாக்க மாத்திரம் முனைந்திருப்பது [illegible]

இதன்மூலம் ஐ. நா. முக்கிய தீர்மானங்களில் ஒன்றான குவைத்தை விட்டு ஈராக் நிபந்தனையின்றி வெளியேற வேண்டும் என்ற விதி நிறைவேறுகின்றது. அதாவது ஈராக் குவைத்திலுள்ள இராணுவத்தை அனுப்பியதனாலேயே ஐ. நா. சபை ஈராக்கிற்கு எதிரான பன்னிரெண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது.

இந்நிலையில், குவைத்தைவிட்டு ஈராக் வெளியேறுவதனால ஈராக் வெளியேற வேண்டும் என்ற முக்கிய தீர்மானம் ஏனைய தீர்மானங்களில் பெரும்பாலானவையும் வலுவிழக்கின்றன.

மேலும், ஈராக் குவைத்தை ஆக்கிரமித்ததனாலேயே உலக நாடுகள் யாவும் ஈராக்கிற்கு எதிரான தீர்மானங்களை ஆதரித்தனவே ஒழிய ஈராக்கை அழிக்கவோ அன்றி சதாம் ஹுசைன் தலைமையிலான ஈராக் இராணுவத்தை சிதைக்கவோ பல நாடுகள் எவையும் ஐ. நா. தீர்மானங்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை.

ஆனால் ஐ. நா. சபையின் ஈராக்கிற்கு எதிரான தீர்மானங்களைச் சமக்கு சாதகமாக வைத்துக்கொண்டு அமெரிக்கா ஈராக்கின் ஆள்புல எல்லையிலும் இறைமையிலும் தலையிடுகின்றது. ஈராக்கின் இராணுவத்தையும், பொருளாதாரத்தையும் சமூக நடவடிக்கைகளையும் முடக்கச் செய்து சதாம் ஹுசைனை ஆட்சியில் இருந்து துரத்தப் பார்க்கின்றது.

இதன் வெளிப்பாடே ஈராக் குவைத்தைவிட்டு வெளியேறுவதாக அறிவித்த பின்னரும் அமெரிக்காவின் மிலேச்சத்தனமான தாக்குதலாகும். இத்தாக்குதல் மூலம் அமெரிக்கர்கள் உலகத்திற்குப் போதிப்பது உலகம் அமெரிக்கருக்கு மட்டுமே சொந்தம் என்பதாகும் கூடவே மேற்கு ஐரோப்பியருக்கும் சிறு பங்குண்டு என்பதாகும்.

மேற்கு ஆசியாவில் தமது இலக்கை அடைவதற்காக வளைகுடாப் பிரச்சினையை அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டது இதன் மூலம் ஐ. நா. சபையையும் அதன் உறுப்பு நாடுகளையும் நன்றாக ஏமாற்றியுள்ளது. ஈராக் மீது யுத்தம் தொடுப்பதற்கு ஐ. நா. பாதுகாப்புச் சபையின் பெரும்பான்மை உறுப்பு நாடுகளின் ஆதரவைப் பெற்ற அமெரிக்கா, தான் விரும்பிய யாவற்றையும் செய்துமுடித்த பின்னரே போரை நிறுத்திக் கொள்ளும் நிலையை உருவாக்கியுள்ளது.

ஆனால், அமெரிக்காவின் இச்செயலைக் கண்டித்து போருக்கான அனுமதியை வழங்கிய ஐ. நா. பாதுகாப்புச் சபையே இன்று யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள முடியாமல் தடுமாறுகின்றது. இதன் தடுமாற்றம் தேற்று முன்தினம் யுத்த நிறுத்தம் பற்றி பேசக்கூடிய ஐ. நா. எதுவித தீர்மானமும் இன்றி முடிவடைந்ததில் இருந்தே தெரியவரும். அதாவது யுத்தத்தை நிறுத்தும் தீர்மானத்திற்கு எதிராக அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பாவிக்கக்கூடிய நிலை உருவாகியுள்ளது.

முதலாம் உலக மகாயுத்தத்தின் முடிவில் சமாதானத்தைப் பேண சர்வதேச சங்கம் உருப்பெற்றது. அவ்வமைப்பு தோல்வியுற இரண்டாம் உலக மகாயுத்தம் நிகழ்ந்தது.

இரண்டாம் உலக மகாயுத்த முடிவில் சமாதானத்தைப் பேண உருவாகிய ஐ. நா. வளைகுடாவில் போரினை உண்டுபண்ணும் யுத்தம் ஒன்றிற்கு பச்சைக்கொடி காட்டியது இன்று யுத்தத்தை முடிக்க முடியாமல் தடுமாறுகின்றது.

இந்நிலையில் ஐ. நாவில் இருந்து சீரமைக்கப்பட்ட அமைப்பு ஒன்று தேவை என மூன்றாம் உலக நாடுகள் பலவற்றிற்கு இன்றைய வளைகுடாப்போர் உணர்த்தியுள்ளது. அவ்வமைப்பில் சர்வதேச அபிப்பிராயம் என்பது இன்று உள்ளதுபோல் மேற்குலகின் அபிப்பிராயம் என்றில்லாமல் உலகில் உள்ள பெரும்பான்மை மக்களின் அபிப்பிராயம் என்பது பிரதிபலிக்கப்படுவதோடு எந்த நாட்டிற்கோ, எவருக்கோ விசேட அதிகாரங்கள் அச்சபையில் இருக்கக்கூடாது என்பதும் முக்கிய அம்சங்களாகக் கொள்ளப்பட வேண்டும்.

---

குண்டுவீச்சு மூலம் பாடசாலைக் கட்டடங்களைத் தகர்த்தது. பின்னர் பாடசாலைகளை மாணவர்களுடன் சேர்த்து அழிப்பதற்கு விமானக்குண்டுகளை வீசியது. இன்று இவற்றிற்கு மேலாக பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பல்

மையாகக் கண்டிப்பதுடன் தமிழ் மகன் எவனும் இக் கொடூர நிகழ்வு பற்றி பிரமுகமாக இருக்க மாட்டான் என்பதனையும் தெரிவித்துக் கொள்வதுடன் சர்வதேச சமூகமும் சிறீலங்கா இனவெறி அரசின் நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்

ாவின் இனஅழிப்பு, பொருளாதாரத்தடை, உற்பத்தித்தடை ஆகியவற்றின் பாதிப்புக்களில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளுக்கும் நாம் ஆதரவு அளிப்போம் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

---

## தற்கொலை

கொடிகாமம் கச்சாய் வீதியில் குருசிங்கம் மனோகரன் என்பவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொடிகாமம் கச்சாய் வீதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. (86)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஆனைவிழுந்தான், குறிஞ்சாத்தீவு, செம்மணி, கல்லுண்டாய் உப்பளங்களைச் சேர்ந்த சகல தர ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்குமான கூட்டமொன்று நாளை வெள்ளிக்கிழமை (1-3-91) முற்பகல் 10-00 மணிக்கு பளையிலுள்ள பிராந்தியக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகலதர ஊழியர்களினதும், அதிகாரிகளினதும் கடந்த வருட ஆடி மாதம் தொடக்கம் மார்கழி மாதம் வரையிலான சம்பளங் கொடுப்பனவு சம்பந்தமாக கடைப்பிடிக்க வேண்டிய புதிய அணுகுமுறை பற்றி ஆராய இருப்பதால் சகலரையும் கலந்து கொள்ளுமாறு உதவி உற்பத்தி முகாமையாளர் த. மனோகரன் அறிவித்துள்ளார்.

## சமூகமளிக்கவும்

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பயிலுனர் ஆசிரியர்கள் அனைவரையும் எதிர்வரும் சனிக்கிழமை 02-03-91 காலை 9.00 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கு சமூகமளிக்குமாறு செயலாளர் பொ. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

## ஆங்கில அடைவுப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

1989, 1990 கல்வி ஆண்டுகளில் தெரிவான ஆங்கில வகுப்புகளில் (GELT) பயிற்சி நெறியை முடித்துக்கொண்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கான அடைவுப் பரீட்சைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் காலை 9 மணியில் இருந்து 1 மணிவரை வாய்மூல, எழுத்துமூலப் பரீட்சைகளாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நடாத்தப்படவுள்ளன. (மு)

## தாக்கப்பட்ட படகையும் மூவரையும் காணவில்லை

(செ. தா. மை)

மீன் பிடிப்பதற்கு படகில் சென்ற நால்வர் மீது சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது ஒருவர் கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்தார் மற்றைய மூவரும் படகும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

கடந்த 24ஆம் திகதி மாலை 6 மணியளவில் உடுத்துறையிலிருந்து சென்றவர்களுக்கே இக்கதி நேர்ந்தது. தப்பி வந்தவர் ஐயர் என்று அழைக்கப்படும் மகேந்திரன் (வயது 38) என்பவராகும். இது இவ்வாறிருக்க பருத்தித்துறைக் கடல் பகுதியில் இரு சடலங்கள் மிதப்பதாகவும் படகுடன் காணாமற்போன மூவருள் இருவரின் சடலங்கள் இதுவாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

## பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் விரும்பவில்லை

### -நவசமசமாஜக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

"வடபகுதியில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்மூடித்தனமான தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்" என நவசமசமாஜக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்தக் கட்சி விடுத்துள்ள கண்டன அறிக்கையில், "சிறு குழந்தைகள் உட்பட பொது மக்கள் பலர் இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டுள்ளனர். நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள் வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் கடந்த எட்டு மாதங்களாக அரசபாவிதங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அவர்களது அத்தியாவசியத்தேவைகளான உணவு, மருந்து போன்றவற்றின் சிறுபகுதியையேனும் வழங்காத தவறிய அரசாங்கம் இவ்விதம் தாக்க மாத்திரம் முனைந்திருப்பது கோழைத்தனமானது" என்றும் தெரிவித்துள்ளது.

இத்தகைய கொடூரத் தாக்குதல்களின் மூலம் இனப்படுகொலை புரிவதையன்றி வேறு வகையில் சாத்தியமிக்க கடிய தீர்வு எதையும் காண விரும்பவில்லை என்ற அரசாங்கத்தின் அந்தரங்கம் வெளியாகி உள்ளது என்றும், அக்கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## உளப் பாதிப்படைந்தோருக்கு சாந்திகம் இலவச ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

சமீபத்திய அசம்பாவிதங்களினால் உளப்பாதிப்படைந்தவர்களுக்கும், தனிப்பட்ட வாழ்க்கையின் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளவர்களுக்கும் உளவளத்துணை நிலையமான சாந்திகம் இலவச ஆலோசனை வழங்கிக் குணப்படுத்தி வருகின்றது. புகைத்தல், மதுபானம், போதைப்பொருள் பாவனையாளர்களுக்கும் உளவளத்துணையாளரின் உதவி வழங்கப்படுகின்றது.

இந்நிறுவனம் யாழ். கச்சேரியடியில் இயங்கி வருகின்றது. இலங்கையில், இவ்வகையில் மனிதநேய சேவையை ஆற்றிவரும் ஸ்தாபனம் இது ஒன்றேயாகும்.

## வங்கியில் நிவாரணம்

இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையில் எதிர்வரும் சனிக்கிழமை 2ஆம் திகதி ரூபா 4,000 கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

பெரியவிளான் ஜே-72 கி. சே பிரிவில் 378 குடும்பங்களுக்கும் சுதுமலை ஜே-62 கி. சே பிரிவில் 52 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படும். கொடுப்பனவுகள் வங்கிக் கட்டணையாகச் செலுத்தப்படும்

